Nallur Branch Library

உங்களை
அழைக்கின்றது
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையின
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Registered as a Newspaper

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ 5/- (Post Card Size 3R 3 1/2" x 5")
* நெகடிவ் செய்வதற்கு இலவசம் (Processing Free)
* Enlargements
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 28628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞு ஆனி மீ 25 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 30 (09 07 1986) UTHAYAN- A LIVELY TAMIL DIALY கதிர்: 199

இனப்பிரச்சினை-மாகாணசபைகள்

அரசியல் தீர்வு குறித்து நம்பிக்கையே இல்லை

அமிர்தலிங்கம் பேட்டி

புதுடில்லி, ஜூலை 8

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்போம் என்பதில் நம்பிக்கையே இல்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இப்படித் தெரிவித்ததாக "ராய்ட்டர்" செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு தெரிவித்தார் என்று 'ராய்ட்டர்' மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பரவலாக்கல் குறித்தும், வேறு பல அம்சங்கள் குறித்தும் புதிய யோசனையில் பலத்த சந்தேகம் இருக்கிறது.

சட்டம், பரவலாக்கும் அதிகாரங்கள் ஆகியவை மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவை ஆளுநரிடம் தான் ஒப்படைக்கப்படும் என இப்போது கூறப்படுகிறது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது வார்த்தையிலிருந்து தவறிவிட்டார் என்பதையே இது காட்டுகிறது.

அமிர்தலிங்கம்

புதிய யோசனை எமக்கு திருப்தியளிக்காவிட்டாலும் அதை அடிப்படையாக வைத்து ஒரு பேச்சுவார்த்தையை நடத்த இணங்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

அதிகாரமாற்றம் அரசமைப்பு சட்டத்திருத்த மூலம் கொண்டு வரப்படுமா? அல்லது சாதாரண சட்டம் ஒன்றின் மூலம் நிறைவேற்றப்படுமா, என்பது பற்றியும் சில கருத்து வேறுபாடுகள் உருவாகியுள்ளன.

அத்துடன் மாகாண
(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

09-07-1986
புதன்கிழமை
சுபநேரம்:-
4 28 முதல் 5 58 வரை
ராகுகாலம்:-
11 58 முதல் 1 28 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

கூட்டணி அரசியல் குழு கூடுகிறது

சென்னை, ஜூலை 9

புதுடில்லிப் பேச்சுக்களை முடித்துக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நேற்று (செவ்வாய்) சென்னை திரும்பினர். இன்று (புதன்கிழமை) கூட்டணியின் அரசியல் குழு சென்னையில் கூடும் என்றும்—

கொழும்பு சென்று ஜனாதிபதியுடன் பேசுக்கள் நடத்துவதுபற்றி இக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் சென்னையில் கூட்டணி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (அ-எ)

கூட்டணிக் குழு கொழும்பு வரும்

சென்னை, ஜூலை 8

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு தயாரிக்கும் புதிய யோசனைகள் குறித்துப் பேசுவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக்குழு கொழும்புக்கு வரும்.

ஆனால் கூட்டணிக்குழு ஜூலை 15 இல் நடைபெறும் அரசியல் கட்சிக் கூட்டத்தில் பங்குபற்றாது.

புதிய யோசனைகள் குறித்து ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவுடன் மட்டும் தாதக்குழு தனிப்பட்ட முறையில் பேசும்.

இப்படி கூட்டணிப் பிரமுகர் திரு நீலன் திருச்செல்வம் தெரிவித்ததாக 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ-2)

கடைக்குள் நின்ற மூவர் கைது

யாழ்ப்பாணம் ஜூலை 9

வவுனியாவில் பூட்டிய கடையினுள் தங்கியிருந்த மூன்று தமிழ் இளைஞர்களை தேடுதல் நடத்திய காப்புச் சிறுடையினர் திங்கள் இரவு கைது செய்தனர்
(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



தோர்மார் தக்கடை வழமையான வேலையைச் செய்யத்தானே வேணும். ! எவெண்டா அரசாங்கங்களை பதவியிலை ஏத்துறதும் இறக்கிறதும் அவையள் தானே...!

போராளிகள் பதில்

சென்னை, ஜூலை 9

புதிய யோசனைகளுக்கும் தமிழர் அபிலாஷைகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருக்கின்றது.

தமிழர் போராளிகள் அமைப்பு புதிய யோசனைகள் குறித்து தனித்தனியாக சமர்ப்பித்த தமது எழுத்துமூலப் பதிலில் இப்படித் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

ஐந்து போராளிகள் அமைப்புகளினதும் பதில்கள் சனியன்று தமிழக முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டன அவை டில்லிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

மாகாண சபை யோசனை:

அவசரம் வேண்டாம்

மகாசங்கம் அறிக்கை

கொழும்பு, ஜூலை 9

சிங்கள - பௌத்த மக்களின் வாழ்க்கையில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதான மாகாணசபை யோசனைகளை அவசரப்பட்டு நிறைவேற்ற வேண்டாம்.

இப்படி மகாசங்கக் கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு அகில இலங்கை பௌத்த சங்க மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. அஸ்கிரிய பீடாதிபதி பலிபான சந்தானந்த தேரர் தலைமை தாங்கினார். மல்வத்தை மகா நாயக்க தேரர் கலந்து கொள்ளவில்லை. அவரின் பிரதிநிதி கூட்டத்தில் கலந்து கொண்டார்.

கூட்ட முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:- மாகாண சபை யோசனைகள் சம்பந்தமாக ஆராய விசேட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. யோசனைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கத் தரப்பட்ட கால அவகாசம் போதாது. பொது மக்களும் இந்த யோசனைகள் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (அ-எ)

தேரர்கள் ஆர்ப்பாட்டம்

புதிய யோசனைகளை வாபஸ் பெறும்படியும்— வடக்கு, கிழக்கில் இருந்து இராணுவத்தை விலக்கவேண்டாம் என்றும் கோரி ஸ்ரீ. ல. சு. கட்சி சார்பான — கப்பஹாவைச் சேர்ந்த — தேரர்கள் சிலர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர்

இதற்கு ஆதரவும், ஒத்துழைப்பும் கோரி சிங்கள எம். பிமாருக்கு அவர்கள் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளை

குச்சவெளியில் ஒரு கடை, இரண்டு வீடுகள் கடந்த சனிக்கிழமை கொள்ளையிடப்பட்டன.

சுமார் 29 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், நகை, மற்றும் பொருள்கள் கொள்ளை போயின. (உ-எ-150)

இன்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 9

இன்று கொழும்பில் நடைபெறும் பாதுகாப்பு அதிகாரிகளின் மாநாட்டில் யாழ் கோட்டைத் தொடர்புத் திணைக்கள அதிகாரிகள், ஊழியர் வேலைக்குத் திரும்பும் பிரச்சினை ஆராயப்படும் என்று தெரிகின்றது. (உ-எ-6)

மாங்கேணித் தாக்குதல்

கேர்ணல் பலி!

சிப்பாய்களும் மரணம்

புலிகள் அறிவிப்பு

மாங்கேணி முகாமைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கியபோது கேர்ணல் ஒருவரும் பல சிப்பாய்களும் பலியாகினர்

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதலின் போது நாம் உட்புகுந்து தகர்த்த கட்டடங்களிடையே சிக்கிக் கொல்லப்பட்டவர்களில் கேர்ணல் ஒருவரும் அடங்குவார்.

இவர் மூன்று இராணுவ முகாம்களுக்கு பொறுப்பதிகாரியாவார்.

இந்தத் தாக்குதலின் போது வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து கமாண்டோக்கள் வாகனங்களில் இம் முகாமிற்கு உதவியாக புறப்பட்ட சமயம் எமது வீரர்கள் கிரனேட் வீசியதில் கமாண்டோக்கள் தரப்பில் உயிர்ச்சேதமும் காயங்களும் ஏற்பட்டன.

மாங்கேணி முகாமைத் தாக்குவதற்காக எம்மால் காயங்கேணிப் பாலம் தகர்க்கப்பட்டது. இதனால் இம்முகாமினருக்கு வேறு முகாம்களில் இருந்து தரை வழியாக உதவிகள் இட்டுவதில் தடை ஏற்பட்டது.

சேதமாக்கப்பட்ட பாலத்தினைச் சீர் செய்வதற்காகப் பொலிஸ் கமாண்டோக்கள் பாலத்தில் நின்றபோது ஏற்கனவே எம்மால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் வெடித்ததில் பல கமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

யாழ் நகரில் நாளை துக்கதினம்

அனுஷ்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம். ஜூலை 9

நாளை வியாழக்கிழமை யாழ் குடாநாடு எங்கும் துக்கம் அனுஷ்டிக்குமாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கடலில் மரணித்த மக்கள் விடுதலைப்படையினரின் ஏழு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையிலேயே நாளைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

நாளை மாலை மூன்று மணிமுதல் கடைகளைப் பூட்டியும்-

போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தியும—

கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டும் மக்களுக்காக மரணித்த தோழர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறு ஈ பி. ஆர் எல் எவ். இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

போராளிகள் ஏழு பேர் படகு கவிழ்ந்து பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 9

நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணியளவில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் போராளிகள் சென்றுகொண்டிருந்த படகு ஒன்று கடலில் விபத்துக்குள்ளானதில் ஏழு போராளிகள் உயிரிழந்தனர்.

சில போராளிகள் நீந்தியும் வேறு படகின் உதவியுடனும் கரைசேர்ந்தனர்.

பாலைதீவு கடற்பகுதியில் இப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடலுக்குள் பலியான மக்கள் விடுதலைப் படையின் முக்கிய உறுப்பினர்களான இருபாணந்தன் (இமாம்) — சாவகச்சேரி, ஈஸ்வரன் (எட்வேட்) — கோப்பாய், மோகன்ராஜ் (அசோக்) — இளவாலை விமலேந்திரன் (நாகராசா)— திருகோணமலை, கண்ணன் (சுகிர்தன்) — கல்வியங்காடு, ஞானசேகரன் — மட்டக்களப்பு, அகிலன் (செண்பகன்) — உரும்பராய் ஆகியோருக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வீர
(4 ஆம் பக்கம் பார்க்க)

பரந்தனில் சம்பவம்

கிறிஸ்தவ துறவி சென்ற ஜீப்பை 'ஹெலி' துரத்திச் சுட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 9

பரந்தனில் வாழும் ஒல்லாந்து நாட்டு கிறிஸ்தவத் துறவி வண பிதா ஒம்லோ சென்ற ஜீப்பை நேற்று ஹெலிக்கொப்டர் ஒன்று துரத்தித் துரத்திச் சுட்டது.

இதனால் கிறிஸ்தவத் துறவி மயிரிழையில் உயிர் தப்பினார். இவருடன் கூட வந்தவர் காயமடைந்தார். கிறிஸ்தவத் துறவியின் ஜீப்பும் இத் தாக்குதல்களால் சேதமடைந்தது.

இச் சம்பவம் பற்றி
(4 ஆம் பக்கம் பார்க்க)

ஒருவாரத்தில்மட்டும் 58ரைபிள்கள் அபேஸ்

திருகோணமலை, ஜூலை9

திருகோணமலைமாவட்டத்தில் கடந்தஒருவாரத்தினுள் மட்டும் 58 முஸ்லிம் ஊர்காவல் படைவீரர்களிடம் இருந்து ரைபிள்களும் தோட்டாக்களும் தமிழ்த் தீவிரவாதிகளால் அபகரிக்கப்பட்டன.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மொத்தம் 58 ரைபிள்களும் 290 தோட்டாக்களும் இப்படி அபகரிக்கப்பட்டன

சீனன்வாடிப் பொலீஸ் பகுதியில்—

ஆலையடி: 7 ரைபிள்கள் 73 தோட்டாக்கள்.

98ஆம் கட்டை: 14 ரைபிள்கள்.

தெஹிவத்தை: 18 ரைபிள்கள்

வானூறு பொலீஸ் பகுதி—

சூரங்கல்: 9 ரைபிள் 73 தோட்டாக்கள்

கச்சைக்காடு: 6 ரைபிள்கள் 80 தோட்டாக்கள்.

மணிலரசன் குளம்: 4 ரைபிள்கள் 64 தோட்டாக்கள். (உ-எ-150)

திட்டவட்ட யோசனைகள் மீளவும் அமைச்சரவைக்கு

அரச குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு ஜூலை 9

அரசியல் கட்சிகளின் கருத்துக்களைப் பெற்ற பின்னர் தயாரிக்கப்படும் திட்டவட்டமான மாகாணசபை யோசனைகள் மீண்டும் அமைச்சரவை முன் சமர்ப்பிக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா, நேற்று நடைபெற்ற அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கோட்டே நாடாளுமன்றக் கூட்டத்தில் அரசாங்கக் குழுக்கூட்டம் நடைபெற்றது

எம் பிக்களைத் தனித்தனியாக தான் சந்தித்து அவர்களின் கருத்தை அறிய இருப்பதாகவும், அதன் பின்னர் மீண்டும் அரசாங்கக் குழுவைச் சந்திப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்

மாகாண சபைத் தேர்தலில் எம் பி க்கள் போட்டியிட்டு முதலமைச்சராக வருவதற்கு இடமளிப்பதா என்பது
(4 ஆம் பக்கம் பார்க்க)

சிங்களத்துடன் தமிழும் அரச கரும மொழி

ஜனாதிபதி உறுதியளித்தாராம்

சென்னை ஜூலை 8

சிங்களத்துடன் சேர்ந்து தமிழும் அரச கரும மொழியாக்கப்படும்.

இப்படி ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா தயமிடம் உறுதியளித்திருப்பதாக நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கலாநிதி கருணாரத்ன தலைமையில் அவரது கட்சிக்குழு ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியது.

புதிய யோசனைகள் திருப்தியளிப்பதாக இல்லை என கலாநிதி கருணாரத்ன சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

இந்த யோசனைகளில் அடிப்படை மாறுதல்கள் செய்யவேண்டும். தமிழ்க்குழுக்களின் அடிப்படைக் கோரிக்கையான தாயகக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்—இப்படி ஜனாதிபதியை தமது கட்சிக்குழு வற்புறுத்தியதாக அவர் சொன்னார். (உ-9)

கிளிநொச்சியில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கிளிநொச்சி இராணுவ-பொலீஸ் கூட்டு முகாமில் இருந்து நேற்று நண்பகல் பரந்தன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் அங்கு பதற்றம் நிலவியது.

அவ்வேளை ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் பரந்தன் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச்சம்பவங்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை (உ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

க. பொ. த. உயர்தரம்

யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுத வசதி செய்து தருக

இடம் பெயர்ந்த மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சையை யாழ்ப்பாணத்தில் எழுதுவதற்கு வழி செய்து தாருங்கள்

திருமலை, வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மாணவர்கள் வடமாநில கல்விப் பணிப்பாளரிடம் இப்படி ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

தற்போது உள்ள சூழ்நிலையில் நாம் எமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லமுடியாது.

அப்படிச் சென்றாலும் அங்கு சுதந்திரமாக பரீட்சை எழுத முடியாது.

எனவே எமக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சை மண்டபங்களில் பரீட்சை எழுத வசதி செய்து தாருங்கள் — இப்படி அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாணவர் ஒன்றியம்

வன்செயல்களினால் இடம் பெயர்ந்து யாழ் மாவட்டம் வந்துள்ள ஜீ. சி. ஈ. உயர்தர மாணவர்களால் ஒன்றியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெற உள்ள ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் இடம் பெயர்ந்த மாணவர்களாலேயே இம் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக ரி. சியாம், செயலாளராக ஆர். பிரேதன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

இடம் பெயர்ந்துள்ள சகல பரீட்சார்த்திகளும் தங்கள் சகல விபரங்களையும் 10 ஆம் திகதிக்கு முன் இந்த ஒன்றியத்திடம் நல்லூர் இந்து விடுதியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவர்கள் சம்பந்தமான சகல உதவிகளையும் செய்து தருவதாகக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் உறுதியளித்துள்ளார் (இ-510)

My Thanks

Thanks to St. Jude, St. Sebastian, St. Antony, St. Lucia and Lady of Fatima for favours rendered. N P.

தேவை

எம்மிடம் அனேக மணமக்கள் உண்டு. விரைவில் இல்லறத்தில் புகுத்துவோம். ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழை இல: 52/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

✳ கனடா
✳ ஜேர்மன்
✳ பிரான்ஸ்
✳ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட் (BOND), ரிக்கட்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

டென்மார்க்

ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்படுகின்றதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

அவசரகால நீடிப்புப்பிரேரணை:

உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, ஜூலை 9

அவசரகால நீடிப்புப் பிரேரணையை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வசதி செய்யக்கூடியதாக அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய அரசாங்கம் எடுத்த முடிவை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

பெலியத்த வாசியான றிச்சரிட் விஜயசிங்க என்பவர், இந்த மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

மனுவில் அவர் கூறியிருப்பதாவது;

இத் திருத்தம் அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்படப் போகும் 10 ஆவது திருத்தமாகும்.

அரசமைப்புச் சட்டத்தின் 83ஆவது ஷரத்தின்படி சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்களின் அதிகாரத்தை இத்திருத்தம் பெறவேண்டும்

மக்களின் இறைமையைப் பாதிக்கக்கூடிய விதத்தில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியாது.

ஆகவே உத்தேச 10 ஆவது திருத்தம் அரசமைப்புச் சட்டத்தின் 83 ஆவது ஷரத்தின் கீழ் ஒத்துப் போவதாக இல்லை

இப்படி மனுவில் கூறப்பட்டுள்ளது. (இ-எ-2)

ரூ. 10 லட்சம் செலவில் கட்டடம்

பருத்தித்துறை, ஜூலை 9

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் பத்து லட்சம் ரூபா செலவில் அலுவலகம், நூலகம், பிரார்த்தனை மண்டபம், வகுப்பறைகளைக் கொண்ட இருமாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த கட்டட அமைப்பிற்கான முதற் கட்ட நிர்மாண நிதிக்கென இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இரண்டாம் கட்ட நிர்மாணத்திற்கென நிதி அடுத்த வருடம் ஒதுக்கீடு செய்யப்படுமெனக் கல்லூரி அதிபர் திருமதி. எஸ் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

வாகனம் கடத்தப்பட்டது

மட்டக்களப்பு, ஜூலை 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசவடிசாலைக் கூட்டுத் தாபனத்துக்குச் சொந்தமான ட்ரக் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் அம்பாறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த ட்ரக்கை சாரதி, கிளினர் ஆகியோருடன் கடத்திச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (இ-எ-21)

கான்ஸ்டபிள் தலைமறைவு

கொழும்பு, ஜூலை 9

கம்பஹா மாவட்டத்தில் பூகொட பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபில் ஒருவர் தலைமறைவாகி விட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரின் வீட்டில் இருந்து எஸ். எம். ஜி. எஸ். எல். ஆர் துப்பாக்கிகளுக்குப் பாவிக்கப்படும் ரவைகளில் சுமார் 200 சுற்றுக்களை அண்மையில் பொலீஸார் கைப்பற்றினர்.

அதைத் தொடர்ந்தே கான்ஸ்டபிள் தலைமறைவாகி விட்டாராம்.

இந்தக் கான்ஸ்டபிள் 6 மாதங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் பணிபுரிந்தவர். இவரைத் தேடித் தீவிர தேடுதல் நடக்கிறது. (இ-எ-2)

2 சிப்பாய்கள் தலைமறைவு

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு கறுவாக்காட்டுப்பகுதியில் கடந்த மே 31 ஆம் திகதி இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக இரண்டு இராணுவச் சிப்பாய்கள் தேடப்பட்டு வருகிறார்கள்.

அந்த இரண்டு சிப்பாய்களும் தலைமறைவாகி விட்டார்கள்.

கொள்ளைச் சம்பவத்தின் பின்னர் இரண்டு சிப்பாய்களும் வேலைக்குப் போவதை நிறுத்தி விட்டார்கள்.

அச்சம்பவத்தில் கறுவாக்காட்டில் வீடு ஒன்றில் தங்கியிருந்த இரண்டு தாய்வான் நாட்டவர்களிடம் இருந்து பெருந் தொகையான பொருள்கள் கொள்ளை இடப்பட்டன. (இ-எ-2)

இளைஞர்சடலம் எரிந்த நிலையில் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 9

கடந்த வெள்ளிக்கிழமை ஒட்டமாவடியில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்களின் சடலங்கள் துப்பாக்கிக் காயங்களுடன் எரியுண்ட நிலையில் ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டன.

இறந்த தமிழ் இளைஞர்களின் பெயர்கள் வருமாறு;

சற்சுணநந்தன், வயது 27—கண்ணன் கிராமவாசி. ரவீந்திரன், வயது 22 - கொண்டையடிச் சேனைவாசி. (இ-எ-21)

கர்நாடக இசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவில் கவின்கலை மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இசையரங்கு நிகழ்ச்சியில் சங்கீத பூஷணம் ஏ. எம். வர்ணகுலசிங்கத்தின் கர்நாடக இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது

இன்று புதன்கிழமை நண்பகல் 1 மணி அளவில் மருதனமடம் இராமநாதன் நுண்கலைப் பிரிவு மண்டபத்தில் இக் கச்சேரி நிகழும். (இ)

தமிழர்களுக்கு அநீதி; சிங்களவர் ஒப்புக்கொள்ளும் நிலை

தபால் அதிபர் உரை

மட்டக்களப்பு, ஜூலை 9

தமிழர்கள் மீது அநீதி இழைக்கப்படுகின்றது என்ற உண்மையை ஒப்புக் கொள்ளும் நிலை இன்று சிங்களவர் மத்தியில் வந்துவிட்டது.

அட்டாளைச்சேனை பிரதம தபால் அதிபரும் தபால் அதிபர் சங்க கல்முனை- அம்பாறைக்கிளை செயலாளருமான திரு. இ. திருநாவுக்கரசு இப்படிச் சொன்னார்.

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்கத்தின் செயலாளராக கடந்த 23 வருடங்கள் செயலாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மு. பரசுராமபிள்ளையை கௌரவிக்கு முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனையில் நடைபெற்ற கூட்டத்திலே உரையாற்றுகையிலேயே திரு. திருநாவுக்கரசு இப்படிச் சொன்னார்.

சிங்கள மக்கள் மீது ஆங்கிலம் திணிக்கப்பட்டது எப்படித் தவறோ அது போன்று தமிழ் மக்கள் மீது சிங்களம் திணிக்கப்படுவது தவறாகும்.

குடியேற்றவாதிகளினால் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட தவறை திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள் தமிழ் மக்கள் தமது நாளாந்த கடமைகளை நிறைவேற்றவும் தொழில் வாய்ப்புகளை பெறவும் இருந்த அடிப்படை உரிமைகளை மறுத்துவிட்டன.

சிங்கள மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டதால நாட்டில் நிகழ்ந்த அனர்த்தங்களை சிங்கள மக்கள் காலம் கடந்தேனும் உணர்ந்திருக்கிறார்கள்.

இதனடிப்படையில் நாட்டில் நிலையான சமாதானத்தை உருவாக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டில் சிங்கள மக்கள் துணிச்சலுடன் ஈடுபட வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கல்முனை பிரதம தபால் அதிபர் திரு. பி எஸ். அல்பிரட் உட்பட பலர் உரையாற்றினர். (உ)

"சட்டவிரோதமான மின்பாவனையைக் கட்டுப்படுத்த கண்காணிப்புக் குழு தேவை"

உடுவில், ஜூலை 9

சட்ட விரோத மின்பாவனை பலவகைகளிலும் எமது சமுதாயத்தை பாதித்து வருகின்றது ஒழுங்கான தம் சட்டதிட்டங்களை உள்ளடக்கியதுமான முறையில் எமது பகுதி மக்கள் மின்சார பாவனையை மேற்கொள்ளும் அவசியத்தை உணர்த்தும் வகையில் கண்காணிப்புக் குழுக்கள் அமைத்துச் செயற்பட வேண்டும்

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் உதவிச் செயலாளரும், சுன்னாகம் உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான திரு. பொ. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவிரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக சுன்னாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து அவர் உரையாற்றினர் (இ-27)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

ஆறுவது திருத்தச் சட்டம் ரத்தாக வேண்டும்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 9

சுதந்திரமாக நாட்டில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், அரசமைப்பின் ஆறுவது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

இப்படி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. பி. சில்வா குறிப்பிட்டார்.

கொழும்பு கிராண்ட் பாஸில் இடம் பெற்ற வர்த்தகர் சங்கக் கூட்டம் ஒன்றில் திரு சில்வா அண்மையில் பேசுகையில் ஆறுவது திருத்தம் அகற்றப்படும் வரை சுதந்திரமான தேர்தல் பேச்சுக்கே நாட்டில் இடமில்லை என்றார். (இ-எ-2)

கல்லாக்காரம் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கல்லாக்காரம் எமக்குக் கிடைத்த இயற்கையான வரப்பிரசாதமாகும். இந்தியாவில் கல்லாக்காரம் 'காயகல்பம்' என்று போற்றிப் புகழப்படுகின்றது.

கல்லாக்காரம் எமது நாட்டிலும் கிடைக்கக் கூடியதாக உற்பத்தியை மேற்கொண்டுவரும் பனை அபிவிருத்திச் சபையின் முயற்சிகள் பாராட்டுவதற்குரியது.

மில்க்வைற் அதிபரும், பனை அபிவிருத்திச் சபையின் இயக்குனருமான சிவதர்மவள்ளல் திரு க. கனகராசா இப்படிக் கூறினார்.

'கற்பகம்' சஞ்சிகையில் பனை அபிவிருத்திச் சபையால் நடத்தப்பட்ட கல்லாக்காரம் கவிதைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுத் தொகைகளை 'கற்பகம்' வெளியீட்டாளர்களான வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜப் பொது முகாமையாளர் திரு. ஆ. ந. இராசேந்திரனிடம் கையளித்து அவர் பேசினார்.

இவ்வைபவம் பனை அபிவிருத்திச் சபையின் மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. க நடராசா தலைமையில் நடைபெற்றது.

சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட பனந்தும்பு பிரஷ்களையும் திரு. கனகராசா இவ்வைபவத்தில் வைத்துப் பெற்றுக் கொண்டார். (இ)

திருமலை கொழும்பு ரயில் சேவை

திருகோணமலை— கொழும்பு ரயில் சேவை வாரத்துக்கு மூன்று தினங்கள் நடைபெறும். இப்படி ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

திருமலை - கொழும்பு ரயில் பாதையில் இருந்த தடைகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து இச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (உ-எ-150)

அகதி முகாம்

சாவகச்சேரி, ஜூலை 9

கிளிநொச்சி தர்மபுரத்தில் இருந்து இடம் பெயர்ந்த அகதிகளுக்கான முகாமொன்று கைதடி கல்வி வெளிக்கள நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது

அறவழிப் போராட்டக் குழுவினரால் நிர்வகிக்கப்படும் இந்த முகாமில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 128 பேர் அகதிகளாக உள்ளனர். (உ-31)

கடத்தலும் கொள்ளையும்

வாழைச்சேனை காகித ஆலைக்குச் சொந்தமான லொறி ஒன்று உதிரிப் பாகங்களை ஏற்றிச் செல்கையில் இனந்தெரியாத நபர்களினால் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டது

ஒலுவிலில் இருந்து வந்த லொறி, தலங்குடா என்னும் இடத்தில் வைத்துக் கடத்தப்பட்டது.

சுமார் 50,000 ரூபா பெறுமதியான உதிரிப் பாகங்கள் இச்சம்பவத்தில் கொள்ளை இடப்பட்டன.

லொறி பின்னர் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது (இ-எ-21)

இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 9

இணுவில் பொது நூலகம் - படிப்பகம் ஆகியவற்றின் திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் முன்றலில் இடம்பெறும்.

யாழ் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உட்படப் பல பிரமுகர்கள் இத்திறப்புவிழாவில் கலந்து கொள்ளுகின்றனர். (உ-எ)

கிழக்கின் எல்லையை மாற்றாமலேயே தனி மாநிலம் சாத்தியம் என்கிறார் தொண்டா

சென்னை. ஜூலை 8

கிழக்கு மாகாணத்தின் எல்லைகளை மாற்றாமலேயே தமிழருக்கு தனி மாநிலம்ஒன்றை அமைக்க முடியும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சென்னையில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் தீர்வு காணுவதற்கான சிறப்பான நேரம் வந்துவிட்டது - என்றும் அமைச்சர் சொன்னார். (இ-எ-2)

வில்கம் விகாரை பகுதியில் சூட்டுச் சத்தங்கள்

திருகோணமலை ஜூலை. 9

ஞாயிற்றுக்கிழமை இரவு திருகோணமலை அனுராதபுரம் வீதியில் வில்கம் விகாரைப் பகுதியில் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கிச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

ஹெலிக் கொப்டரில் இருந்தும் சுடப்பட்டன.

அப்பகுதியில் உள்ள முகாமை போராளிகள் தாக்கியதாகவும் படையினர் திருப்பித் தாக்கியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. (இ-எ-150)

குண்டுப் புரளியால் புறக்கோட்டை பதற்றம்

கொழும்பு, ஜூலை 9

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையம் குண்டுப் புரளியினால் ஞாயிறு இரவு அல்லோல கல்லோலப்பட்டது

பஸ் நிலையத்தில் ஒரு பார்சல் காணப்பட்டது. தகவல் கிடைத்த ஆயுதப் படையினர் அந்த இடத்துக்கு வந்தனர்.

பார்சலினுள் கடதாசிகளும் அகராதி ஒன்றும் இருக்கக் காணப்பட்டன. (இ-எ-2)

விளையாட்டுப் போட்டி: எதனை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்?

உடுவில், ஜூலை 9

இளைஞர்களிடையே மனத்திடனையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துவதற்காக மாத்திரம் நாம் கல்லூரிகளில் உடற் பயிற்சிகளையும், இல்ல விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துவதில்லை. தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியினால் இறுமாப் பெய்யாமலும் வாழ மாணவரைப் பழக்கிக் கொள்வதும் இவற்றின் நோக்கமாகும்.

யாழ் கல்வி திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. [illegible] வாறு கூறினார். [illegible] ரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு வைபவத்தில் அவர் பேசினார்.

விளையாட்டுப் போட்டியில் [illegible] இல்லம் சாம்பியனாக தெரிவானது

கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு பொ. நாகரத்தினம் தலைமையில் போட்டி நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ் கல்வி திணைக்களத்தின் நிர்வாக அதிகாரி திரு. [illegible] கலந்து சிறப்பித்தார். (இ-27)

பம்பாய் வெங்காய பயிரைப் பாதிக்கும் நோய்

யாழ்ப்பாணம், ஜூலை 9

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் வரவழைக்கப்பட்ட புளுறெட் இன விதையின் நாற்றுகள் ஓர் பங்கசு நோயால் பீடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் தெரிவிக்கிறது.

விவசாய உதவிப் பணிப்பாளரும் விவசாய ஆராய்ச்சிப் பகுதியும் யாழ். பல்கலைக்கழக தாவரவியல் பீடமும் சேர்ந்து நடத்திய ஆய்வின் நிமித்தம் பங்கசுவினாலேயே (ஸ்கலரோற்றியம் றொல்சி (Sclerotium rolfsii) இந்நோய் பீடித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நோய் விதை மூலம் பரவுவதில்லை

இப்பூசணம் பரவலாக எமது மண்ணில் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மண்ணில் காணப்படுவதற்குச் சரியான காரணம் ஆய்வுநிலையிலுள்ளது.

தற்போதைய சீதோஷ்ண நிலையும் காரணிக்கு உதவியாக இருக்கிறதென்பதும் ஓர் உத்தேசம். இப்பூஞ்சண நோயைப் பொறுத்தவரை விக் ரம்பூர்றெட் இனம் ஓரளவில் எதிர்க்கும் சக்தியுடையதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இப்பங்கசுவைக் கட்டுப்படுத்தும் முறை

(1) ரெற்சேவோர் 75 வீத டபிள்யூ பி.

1500 கிராம் மருந்தை 100 கலன் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்புக்கு மண் நனையும்படி பிரயோகிக்கவேண்டும்.

அத்துடன் நாற்றுக்களை இப்பங்கசு நாசினிக் கலவையில் அடிப்பாகத்தைத் தோய்த்து நடவும். (1 ஏக்கர் 24 நெற் பரப்ப) அல்லது மேறா — அல்லது பிறிசிக்கோல் ஆகியவற்றையும் தயாரிப்பாளரின் சிபார்சின்படி பாவிக்கலாம்.(இ)

பகவத்கீதை

யாழ்ப்பாணம், ஜூலை 9

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் திருநெல்வேலியில் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ராமகிருஷ்ணாலயத்தில் பகவத்கீதை விரிவுரை சுவாமி சித்ரூபானந்தா அவர்களினால் நடத்தப்படும். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

மனிதனின் மனத்துக்கு முதல் தேவை, அமைதியும் நிம்மதியுமே.

—கண்ணதாசன்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 24805
22073
த. பெ. 23

09-07-86

பேச்சுக்கு முன்பதாக மூன்று முக்கியங்கள்

அரசாங்கம் சமர்ப்பித்த மாகாண சபைத் திட்டத்தை ஆராய்வதற்காக அரசியல் கட்சிகள் அடுத்த செவ்வாய்க்கிழமை கூடவுள்ளன.

இந்த மாநாடு கூடுவதற்கு முன்னர், மூன்று முக்கிய காரியங்களை அரசாங்கம் செய்தாக வேண்டும் என்று மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் ஐந்து அரசியல் கட்சிகள் கேட்டிருக்கின்றன.

விஜயகுமாரணதுங்காவைச் செயலாளராகக் கொண்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே அந்த மூன்று காரியங்களையும் வலியுறுத்தி உள்ளன.

ஐந்து கட்சிகளும் கேட்டிருக்கும் மூன்று முக்கிய விடயங்களும் வருமாறு:

1. யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.
2. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்தல்.
3. அரசமைப்புச் சட்டத்தின் ஆறுவது திருத்தத்தை நீக்குவது.

அதாவது நாட்டுப் பிரிவினைக்குத் தூண்டுதலாகவோ, உடன்பாடாகவோ இருக்கமாட்டோம் என்று எம்பிக்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஏனையோர் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் அரசமைப்புச்சட்டத்துக்கான திருத்தத்தை நீக்குதல்.

இனப்பிரச்சினை நீண்ட காலத்துப் பிரச்சினை. அதனைத் தீர்ப்பதில் சகல தரப்பாரும் இதயசுத்தியுடன் பங்காற்ற வேண்டும்.

சமாதானப் பேச்சு நடக்கும்போது சண்டை இருக்கக்கூடாது எனவே அரசியல் கட்சிகளின் மாநாடு நடக்கும் போது யுத்த நிறுத்தம் பிரதானம் அதனாலேயே யுத்த நிறுத்தம் அவசியம் என்று ஐந்து கட்சிகளும் வலியுறுத்தி இருக்கின்றன.

"சமாதானமும் சண்டையும்" என்ற தலைப்பில் இப்பத்தியில் 29-06-86 இதழில் யுத்த நிறுத்தத்தின் அவசியம் வலியுறுத்தப்பட்டு இருந்தது.

யுத்த நிறுத்தத்தை முதலில் அமுல்படுத்த வேண்டிய முக்கிய பொறுப்பு அரசாங்கத்திடமே உண்டு எனவும் அப்போது தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கம் தானாகவே யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடித்து முன் உதாரணமாக நடந்து கொண்டால் போராளிகளும் அதனை மதிப்பார்கள் என நம்பலாம். அரசாங்கம் நூற்றுக்கு நூறு சண்டை நிறுத்தம் செய்வதில் தான் நிலைமை தங்கியிருக்கும்.

முன்னர் ஒரு தடவை தன்னிச்சையாக யுத்த நிறுத்தம் என்று அறிவித்துவிட்டு, அரசாங்கப்படைகள் நடத்திய அட்டகாசங்கள் மீண்டும் நடக்காமல் உத்தரவாதப்படுத்துவது அவசியம்.

அரசாங்கம், போராளிகள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் கேட்டிருக்கின்றன.

யுத்த நிறுத்தத்துக்கு அடுத்ததாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்வதாலும் சமாதானப் பேச்சுக்குச் சாதகமான ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க முடியும்.

அரசமைப்புச் சட்டத்துக்கான ஆறுவது திருத்தத்தை நீக்குவதன் மூலம், தமிழர் சமாதானப் பேச்சுகளில் பங்குபற்ற நல்ல வாய்ப்பை உருவாக்கலாம்.

அரசியல் கட்சிகளின் இந்த மூன்று கோரிக்கைகளையும் ஆதரவான மனப்பாங்குடன் ஜனாதிபதி கேட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த ஆதரவை விருப்பத்தை ஜனாதிபதி செயற்படுத்தினால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே அவர் நாடுகிறார் என்பது ஓரளவுக்கு ஆகுதல் ருசுப்படுத்தப்படும்.

சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அவ்வாறு செய்வாரா? அரசியல் கட்சிகள் மாநாடு முழு அளவில் நடப்பதற்கு முன்னர் முன்கண்ட மூன்று கைங்கரியங்களையாவது செய்து, தமது உண்மைத்துவத்தை நிரூபிப்பாரா?

விளையாட்டின் தரம் உயரவேண்டும் என்கிறார் மன்சூர்

முல்லைத்தீவு, ஜூலை 9

பாடசாலைகளிலும் சரி, கல்வித்திணைக்கள மட்டத்திலும் சரி, வட்டார மாவட்ட மட்டத்திலும் சரி, விளையாட்டுப் போட்டிகளை நடத்தி முடித்து விட்டால் போதும் என்ற நிலை இருந்து வருகிறது. இந்நிலை மாறி விளையாட்டின் தரத்தை உயர்த்தும் நோக்கிலும் போட்டிகள் நடத்தப்படவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனாப். எம். எம். மன்சூர் இவ்வாறு கூறினார்.

முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வியதிகாரி திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி அமைப்புக்குழு தெரிவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜனாப் மன்சூர் உரையாற்றினார். (இ)

தென்னாபிரிக்க கறுப்பின தலைவி

மண்டெல்லாவுக்கு பேச்சுச் சுதந்திரம்

அரசு வழங்கியது

கேப்டவுன், ஜூலை 8

தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத் தலைவியான திருமதி வின்னி மண்டெல்லாவிற்கு தென்னாபிரிக்க அரசு மீண்டும் பேச்சுச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது.

திருமதி மண்டெல்லா பொது மேடைகளில் பேசுவதற்கு கடந்த இருபது வருடங்களாக தடை விதிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் கடந்த காலங்களில் அவர் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடவும் அல்லது பேட்டி யளிக்கவும் —

ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் கூடி ஒரே சமயத்தில் கதைக்கவும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் வின்னி மண்டெல்லா இந்தத் தடை உத்தரவை துச்சம் என மதித்து அதனை மீறிச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டு சுமார் கால் நூற்றாண்டு காலமாகச் சிறையில் வாழும் சுதந்திரப் போராட்டத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் மனைவிதான் வின்னி மண்டேலா என்பது தெரிந்ததே. (உ-ஒ)

அஸாமில் வெள்ளம்

கல்கத்தா, ஜூலை 8

அஸாம் மாவட்டத்தில் பிரம்மபுத்திர நதியால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 5 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி உள்ளன.

இம்மாவட்டத்தின் பெரும் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (உ-ஒ)

ஈரான் -சிரியா புதிய உறவு

தெஹ்ரான், ஜூலை 8

ஈரானிய பிரதமர் ஹூசெய்ன் மூஸாபி சிரியாவுடன் புதிய நல்லுறவுகளை நாடியுள்ளார்.

இதன்மூலம் இருநாடுகளினதும் பொது எதிரிகள் பெரிய சவாலை எதிர்நோக்க வேண்டி வரும் என மூஸாபி தெரிவித்தார். (இ-ஒ)

ஸிம்பாப்வேக்கு உதவி செய்வதை அமெரிக்கா நிறுத்தும்

ஹராரே. ஜூலை 8

அமெரிக்காவின் கொள்கைகளுக்கு முரணாக ஸிம்பாப்வே அரசு அறிக்கைகள் வெளியிட்டதைத் தொடர்ந்து ஸிம்பாப்வேவுக்கு வழங்கி வரும் அமெரிக்க உதவிகளைத் தடைசெய்வது பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது

ஸிம்பாப்வே ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம் பெற்ற பின்னர் மிகப் பெரிய அளவிலான உதவிகளை அமெரிக்கா செய்துவந்தது.

தென் ஆபிரிக்கா மீது அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையை ஸிம்பாவே பலமாகக் கண்டித்துவருவது தெரிந்ததே. (உ-ஒ)

வெளி உலகில்

பிரிட்டிஷ் மந்திரியின் தென்னாபிரிக்க விஜயம் திடீரென ரத்து!

லண்டன், ஜூலை 8

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர். ஜியவ்ரி ஹோவ் ஏற்கனவே திட்டமிட்டிருந்த தென்னாபிரிக்க பயணத்தை ரத்துச் செய்துள்ளதாக பி. பி. ஸி அறிவித்தது

எனினும் அவர் ஸாம்பியா ஸிம்பாவ்வே ஆகிய நாடுகளுக்கான தனது பயணத்தை ஆரம்பிப்பார்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போதா, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரைச் சந்திக்க விரும்பாததே பயணம் ரத்தானதற்குக் காரணமாகும் என அவதானிகள் தெரிவித்தனர். (உ-ஒ)

போபால் நிவாரணம் ரூ. 15 கோடி

புதுடில்லி, ஜூலை 8

போபால் ஆலை நச்சு வாயு விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்கென மத்திய அரசு 15 கோடி ரூபா கடனை மத்திய பிரதேச அரசிற்கு வழங்கியுள்ளது.

மத்திய பிரதேச முதலமைச்சர் திரு மோதிலால் ஓராவிடம் இத்தொகை கையளிக்கப்படும். (இ-3)

பிரெஞ்சு ஜனாதிபதி ரஷ்யாவில்

மாஸ்கோ, ஜூலை 8

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிரெஞ்சு ஜனாதிபதி மித்தராண்ட், ரஷ்ய வந்துள்ளார்.

ரஷ்ய அதிபர் கோர்பச்சேவைச் சந்தித்து ஐரோப்பிய பாதுகாப்பு ஆயுதகுறைப்பு போன்றவற்றை ஆராய்வார். (இ-ஒ)

விவாக ரத்துக்கு சட்டபூர்வ அனுமதியா?

50 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம்

புவனர்ஸ் அயர்ஸ், ஜூலை 8

ஆர்ஜென்ரீனாவில் விவாக ரத்துச் சட்டம் அமுல் நடத்தப்படவுள்ளதை எதிர்த்து சுமார் 50 ஆயிரம்பேர் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தினர்கள்.

ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தினர் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தனர். (உ-ஒ)

ஆர்ப்பாட்டம்

வியன்னா, ஜூலை. 8

ஆஸ்திரியாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வால்ட்ஹெய்ம் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்ச்சிக்கு வந்து சேர்ந்தபோது அங்கு பெருந்தொகையானோர் கூடி நின்று அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். (உ-ஒ)

6 ஆவது உலக தமிழ் மாநாடு

கோலாலம்பூர், ஜூலை 8

ஆறாவது உலகத் தமிழ் மாநாடு அடுத்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி கோலாலம்பூரில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பூர்வாங்கக் கூட்டம் அண்மையில் கோலாலம்பூரில் நடந்தது. (உ-ஒ)

ரஷ்யாவின் வரவேற்பும் நிபந்தனையும்

மாஸ்கோ, ஜூலை 8

அணு ஆயுத சோதனைகளுக்கு முடிவொன்று காண அமெரிக்கா தயாராக இருப்பதை ரஷ்யா வரவேற்றுள்ளது.

அதே நேரத்தில் அமெரிக்கா— ரஷ்ய உச்சி மாநாட்டுக்கான சில நிபந்தனைகளையும் ரஷ்யா விதித்துள்ளது. (உ-ஒ)

அக்கினி இயக்கம்

சென்னை, ஜூலை 8

இளைஞரிடம் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க 'அக்கினி' என்ற பெயரில் ஒரு இயக்கம் நாவலாசிரியை சிவசங்கரி தலைமையில் ஆரம்பமானது. ம. பொ. சிவஞானம் இதனை ஆரம்பித்து வைத்தார். (ஒ)

தமிழ்ப் போராளிகளுடன்

இந்திய மண்ணிலும் இலங்கை அரசு யுத்தம்

'புரொன்ட்லைன்' கட்டுரை

தமிழ் நாட்டில் இலங்கை உளவாளிகள் ஊடுருவல் செய்வது குறித்து சென்னையில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் நீண்ட காலமாக அவதானத்துடன் இருந்து வருகின்றன.

கொழும்பில் பயிற்சி கொடுத்து தமிழ் அகதிகள் என்ற போர்வையில் உளவாளிகள் அனுப்பப்படுகின்றார்கள் என்பது அத்தமிழர் அமைப்புக்களுக்குத் தெரியும்.

அப்படி உளவாளிகள் உட்புக முடியாதபடி பார்த்துக் கொள்வதிலும் அவை ஈடுபட்டன.

ஆனால் ஜூனில் சென்னையில் வைத்து இந்தியப் பிரசைகள் இருவரும் இலங்கையர் மூவரும் உளவு பார்த்தமைக்காக கைது செய்யப்பட்டது அத்தமிழர் அமைப்புக்களுக்கு அதிர்ச்சி அளித்தது.

நம்ப முடியாதது

கைது செய்யப்பட்ட உளவாளிகளில் ஒருவர், போராளிக் குழுக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

'இலங்கையின் உளவாளியாக அவர் இருப்பார் என்பதை என்னால் நம்பவே முடியாமல் உள்ளது'' இப்படிச் சொன்னார் இலங்கைத் தமிழ்த் தலைவர் ஒருவர்.

அப்படிக் குறிப்பிட்ட மனிதர் தான் கந்தசாமி நாயுடு. வயது 42. அமைச்சர் தொண்டமானின் பாதுகாப்பு அதிகாரியாக முன்னர் பணியாற்றியிருந்தார்.

1983 வன்செயலைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகளுடன் ஒருவராக சென்னை வந்தவர் தான் கந்தசாமி நாயுடு.

தமிழர் இலட்சியத்துக்காகத் தன்னையே அர்ப்பணித்தவர் என்று சென்னை வட்டாரங்கள் கூறுகின்றன.

அமிருக்கு துணை

1983 வன்செயலைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்து பின்னர் சென்னை செல்ல கூட்டணித் தலைவர் திரு அமிர்தலிங்கத்துக்குத் துணையாக நின்றவர் தான் கந்தசாமி நாயுடு.

> இலங்கை அரசின் உளவாளிகள் என்று கூறப்படும் பலர் இந்தியாவில் கைது செய்யப்பட்டனர்
>
> இதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணையில் தெரிவித்த தகவல்கள் அதிர்ச்சி தருவனவாக அமைந்துள்ளன என்று 'புரொன்ட் லைன்' ஜூன் 28 - ஜூலை 11 இதழில் விசேட செய்தியாளர் எழுதியிருக்கிறார் அதன் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

சென்னையில், அமைச்சர் தொண்டமானுடனான முந்தியத் தொடர்புகள் இந்த 'அகதி'க்கு நல்ல வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தன.

அவற்றை வைத்துக் கொண்டு போராளி அமைப்புக்களும் அவரின் தொடர்பில் பலனைக் கண்டனர்.

திடுக்கிடும் நகவல்கள்

கந்தசாமியைப் பொலீஸார் துருவித் துருவி விசாரித்தனர். அப்போது திடுக்கிடும், பயங்கரத் தகவல்களை கந்தசாமி ஒப்புக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சாளர் பாலசிங்கத்தின் வீட்டுக்குக் குண்டு வைத்ததை கந்தசாமி ஒப்புக் கொண்டார் அந்தக் குண்டு வெடிப்பில் ஒருவரும் [illegible] கூரைதான் சேதமடைந்தது.

'அத்தமிழ்த் தலைவரைக் கொல்ல வேண்டும் என்று தான் எனக்குக் கட்டளை இடப்பட்டது. ஆனால் ஒரு தமிழரை இன்னொரு தமிழர் கொல்வதா? இந்த எண்ணத்தில் திரு பாலசிங்கத்தின் உயிருக்குச் சேதம் விளைவிக்காத விதத்தில் குண்டு வைத்தேன் இப்படி இப்போது சொல்கிறார் கந்தசாமி நாயுடு.

இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் உயர் மட்டத்தினருடன் அவரின் தொடர்புகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன.

அந்தக் குண்டு வெடிப்பில் திரு பாலசிங்கம் உயிர் தப்பியது புலனாய்வுப் பிரிவின் உயர்மட்டத்துக்கு திருப்தி ஏற்படுத்தவில்லை.

ரவி பற்றிய தகவல்

ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் மகன் ரவி ஜயவர்த்தனாவுக்கு போராளிகள் மத்தியில் ஆதரவு தேடுவதும் கந்தசாமிக்கு ஒதுக்கப்பட்ட இன்னொரு பணி.

ஜனாதிபதி ஜயவர்த்தனாவின் காலம் முடிந்த பின்னர் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அப்பதவிக்கு வருவதைத் தடுப்பதுதான் இதன் நோக்கம்.

அமைச்சர் அத்துலத்முதலியிலும் பார்க்க ரவிஜெயவர்த்தனா ''தமிழர் இலட்சியங்களுக்கு'' மிகவும் சாதகமானவர் என்ற அபிப்பிராயத்தை போராளிகள் மத்தியில் ஏற்படுத்தும் பணியும் கந்தசாமிக்கு ஒப்படைக்கப்பட்டது.

அதற்காக மாதம் 3,000 ரூபாவுக்கும் 4,000 ரூபாவுக்கும் இடைப்பட்ட பணம் பல்வேறு வழிகளில் கந்தசாமிக்குக் கொடுபட்டு வந்தது.

இந்த தொகைப் பணம் [illegible] இலங்கை அரசுக்கு [illegible] வைத்ததா? —இப்படி விசாரணை செய்யும் அதிகாரிகள் ஆச்சரியப்பட்டார்கள்.

கந்தசாமி கைது செய்யப்பட்டது, அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகியன இலங்கை அரசுக்கு பெரும் இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

இந்திய மண்ணில் யுத்தம்

தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக இலங்கை அரசு நடத்தும் யுத்தத்தில் புதிய பரிமாணம் ஏற்பட்டுள்ளது.

இந்திய மண்ணிலும் போராளிகளுடன் யுத்தம் நடத்த இலங்கை அரசு ஈடுபடுவதுதான் அதுவாகும்.

சென்னையில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அதற்கு ஆதாரங்களாக விளங்குகின்றன.

கந்தசாமி தானாக முன் வந்து சொல்லாமல் இருந்திருந்தால், பாலசிங்கம் வீட்டுக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் இலங்கை அரசு ஏஜண்டுகளுக்கும் இருந்த தொடர்பு வெளிவந்திருக்கவே முடியாது.

1978 இல் இருந்து 1983 வரை கந்தசாமியை பாதுகாப்பு அதிகாரியாக வைத்து இருந்த அமைச்சர் தொண்டமான் என்ன சொல்கிறார்?

''கந்தசாமியுடன் நான் தொடர்பு கொண்டு இருந்தேன் என்று கூறுவது வெறும் முட்டாள்தனமான பேச்சு'' —இப்படி கொழும்பில் வைத்து அமைச்சர் தொண்டமான் சொன்னார். (உ-எ)

[illegible]



குறள்:

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ்
சொல்லார் மருள் தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

பொருள்:

மயக்கத்தில் இருந்து தெளிந்த மாசற்ற அறிவை உடையவர் பயன் நீங்கிய சொற்களை ஒரு கால் மறந்தும் சொல்லமாட்டார்.

கந்தசாமியின் கூற்று விசித்திரமானது

'குமுதம்' ஆசிரிய தலையங்கம்

கொழும்பு, ஜூலை 9

உளவு பார்த்த குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் தமிழகத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் கந்தசாமி தெரிவிக்கும் தகவல்கள் சில சமயம் திடுக்கிடும்படியாகவும் சில சமயம் விசித்திரமாகவும் இருக்கின்றன.

தமிழகத்தில் இருந்து வெளியாகும் 'குமுதம்' வார சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'சுவையான தகவல்கள்' என்ற தலைப்பில் ஜூன் 26 ஆம் திகதி இதழின் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசின் ஏவுதலின் பேரில் தமிழகத்தில் வேவு பார்க்க நுழைந்ததாக கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஐவரில், கந்தசாமி என்ற முதல்வர் கூறியிருக்கும் தகவல்கள் சில சமயம் திடுக்கிடும்படியாகவும் சில சமயம் விசித்திரமாகவும் இருக்கின்றன.

பாலசிங்கம் வீட்டில் வெடிகுண்டை அவர் தான் வைத்தாராம் ஈழப் போராளிகளுக்கு இடையில் மனக்கசப்பை ஏற்படுத்த இவ்வாறு செய்தாராம்.

அது மட்டுமா?

ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தரும் தமிழக அரசியல் தலைவர்களைத் தீர்த்துக்கட்ட இலங்கை அரசு தங்களுக்கு உத்தரவிட்டதாக கந்தசாமி கூறியிருக்கிறார்,

'ஈழப் போராளிகளுக்காக முழு ஆதரவை வழங்கிவரும் தி மு. க. தலைவர் கருணாநிதி, தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன், தற்போது பேச்சு வார்த்தைக்காக இலங்கை சென்று திரும்பிய மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோரைக் கொல்லவும், அந்தப் பழியை ஈழப் போராளிகள் மீது போடவும் இலங்கை அரசு உத்தரவிட்டது'' என்பது கந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

சமய சந்நிதிகளில்

மாவைக் கந்தன் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

16 ஆம் திகதி மாலை ஆறுமுக சுவாமி நடனமும், 21 ஆம் திகதி மாலை திருமஞ்சப்பவனியும் 26 ஆம் திகதி மாலை கைலாசவாகனமும், 30 ஆம் திகதி கார்த்திகையும், ஆகஸ்ட் 2 ஆம் திகதி சனி வேட்டை திருவிழாவும் 3ஆம் திகதி ஞாயிறு மாலை பெரிய சப்பரமும், 4ஆம் திகதி காலை பஞ்ச ரதபவனியும், ஆகஸ்ட் 5 ஆம் திகதி காலை தீர்த்தமும், 6ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும் நடைபெறும்.

NIRU Tuition Centre
Station Road, Kondavil.
O/L DAY Classes பிரிவு 4
யூலை 14 காலை 8 முதல் 1.30 வரை
குறிப்பு: குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
முறைதரும் பாடசாலை வசதி கொண்டவை,
4 மாதத்திற்குள் முழுப் பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

உதயன்
09 07 1986 புதன்கிழமை

NIRU Tuition Centre
Station Road. Kondavil.
A/L 87, 88 யூன் 15இல் ஆரம்பம்
87 - பௌதிகம்
சனி: 10.30, ஞாயிறு: 10-30 செவ்வாய்: 4-5
பௌதிகவியலும் [illegible]
88 - [illegible]
செவ்வாய் 5-6, வியாழன்: 5-6
Mr சௌந்தி B.Sc (Hons)
87 - இரசாயனம் - சேதன இரசாயனம்; சனி - 9, ஞா - 9
அசேதன இரசாயனம்: செ 3-4, வெள் - 3 - 4
88 பௌதிக இரசாயனம்: Mr. செல்வ B.Sc. (Hons)
சனி: 8 9 ஞாயிறு: 8 - 9

திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 9 யாழ் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் கிளை ஒன்று இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம் முன்பாகத் திறந்து வைக்கப்படும். (உ-எ)

காணவில்லை

திருமதி. ஜெகசோதியம்மா நடராசாவாகிய எனது 227931205 V இலக்க அடையாள அட்டையும் வேறு சில பத்திரங்களும் கடந்த 7-7-86ல் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'கிருஷ்ணஜோதி', பண்குடு ஒழுங்கை. வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

காணவில்லை

பொ. குமாரசாமி நாராந்தனை வடக்கு ஊர்காவற்றுறை எனும் விலாசம் கொண்ட அடையாள அட்டை (371360204V) 1-7-86ல் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். பொ. குமாரசாமி, தம்பாட்டி ஊர்காவற்றுறை தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வேலைக்குத் திரும்புங்கள்!

துப்பாக்கிகளை உங்களை நோக்கி நீட்டமாட்டோம்

தொலைத்தொடர்பு ஊழியர்களிடம் கேர்ணல்

யாழ்ப்பாணம், ஜூலை 9 யாழ் தொலைத் தொடர்பு திணைக்களத்தின் ஊழியர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினால் அவர்களின் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதாக கோட்டை முகாம் பொறுப்பதிகாரி நேற்று உறுதியளித்தார்.

போராளிகள் தொலைத் தொடர்பு அலுவலகத்தில் இருந்து செயற்பட்டாலும் நாம் மிகவும் அவதானமாகவே செயல்படுவோம்—

இப்படி கோட்டை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் ஹப்பு ஆராச்சி நேற்றுக்காலை முகாமில் நடந்த தொலைத் தொடர்பு அதிகாரிகள் கலந்துகொண்ட சந்திப்பின் போது எடுத்துக்கூறினார்.

எக்காரணம் கொண்டும் எமது துப்பாக்கிகள் தொலைத் தொடர்பு திணைக்களத்தை நோக்கியோ ஊழியர்களை நோக்கியோ நீட்டப்படமாட்டா என்றும் அவர் சொன்னார்.

காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை 'ஷிப்ட்' அடிப்படையில் ஊழியர்கள் வேலைக்கு வரலாம்.

எமக்கு 'வயர்லஸ்' இருக்கின்றது அதன் மூலம் நமது தேவைகள் நடைபெறுகின்றன. ஆனால் பொதுமக்கள் நன்மை கருதியே தொலைத் தொடர்பு அலுவலக ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவேண்டும்.

நீங்கள் வேலைக்குத் திரும்பத் தவறினால் கட்டாயமாக வேலைக்குத் திரும்பும்படி உத்தரவிடப்படும்.

அதற்கு முன்னரே நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்

—இப்படி கேர்ணல் ஹப்பு ஆராச்சி சொன்னார்.

'ஷிப்ட்' அடிப்படையில் சென்றும் வேலை செய்யத்தயாராக இல்லை என்று சந்திப்பில் கலந்துகொண்ட தொலைத் தொடர்பு ஊழியர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தொலைத் தொடர்பு திணைக்களப் பொறியியலாளர், மாவட்ட பரிசோதகர்கள், தொலைபேசி இயக்குநர்கள் உட்பட எட்டுப்பிரதிநிதிகள் நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்டனர். (உ-எ-6)

கிறிஸ்தவ துறவி..

(1 ம் பக்கத் தொடர்ச்சி) அறிய வருவதாவது:-

நேற்றுக் காலை பதினொரு மணி அளவில் வண பிதா ஓம்லோ பரந்தனில் உள்ள சென் அன்ரனிஸ் தேவாலயத்திலிருந்து தமது ஜீப்பில் குமரபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

பரந்தன் வீதியால் இவர் சென்றுகொண்டிருக்கும்போது ஹெலிக் கொப்டர் ஒன்று இந்த ஜீப்பை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்தது.

ஜீப்பை மறைவிடம் ஒன்றினுள் செலுத்திய வண பிதா ஓம்லோ, ஹெலிக்கொப்டர் பறந்து மறைந்ததும் மீண்டும் குமரபுரம் நோக்கி தனது ஜீப்பைச் செலுத்தினார்.

குமரபுரத்தில் உள்ள தமது உதவியாளரான பிரான்சிஸ் சேவியர் (26 வயது) என்பவரையும் ஏற்றிக்கொண்டு திரும்பவும் சென் அன்ரனிஸ் தேவாலயத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்.

11.30 மணி அளவில் பரந்தன் சந்தியை இவரது ஜீப் அண்மித்ததும் மீண்டும் திரும்பி வந்த ஹெலிக்கொப்டர் இவர் வந்த ஜீப்பைத் துரத்தித் துரத்திச் சுட்டது.

உடனடியாக ஜீப்பை நிறுத்திய வண பிதா ஒரு கையால் தமது கழுத்தில் அணிந்திருந்த சிலுவையையும் — மறு கையால் தமது அங்கியையும் தூக்கி தாம் ஒரு மதகுரு என்பதை ஹெலிக்கொப்டரில் இருந்தவர்களுக்குக் காட்டினாராம்.

எனினும் தொடர்ந்தும் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இவரது அருகில் நின்ற உதவியாளரான பிரான்சிஸ் சேவியரை (வயது 26) துப்பாக்கிக் குண்டுகள் தாக்கின. சேவியர் மயங்கிக் கீழே விழுந்தார்.

ஜீப்பின் மேல் கூடாரத்தையும் குண்டுகள் தாக்கின.

இதன் பின்னர் வண பிதா ஓம்லோ காயமடைந்தவரை தமது ஜீப்பில் ஏற்றிக்கொண்டு தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்த்தார்.

அவர் பின்னர் வைத்தியசாலையில் இருந்து வைத்தியரை அழைத்து வர வேகமாகச் சென்றபோது மீண்டும் மூன்றாவது முறையாக அவர் சென்ற ஜீப்பின் மீது ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது.

அப்போதும் வண பிதா மயிரிழையில் உயிர் தப்பினார்.

காயமடைந்த பிரான்சிஸ் சேவியர் பின்னர் பூநகரிப் பாதையூடாக யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார்.

அவருக்கு வயிற்றிலும், தொடையிலும், கைகளிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் வண பிதா ஓம்லோ பெரும் அதிர்ச்சி அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிதா ஓம்லோ பிரயாணம் செய்த ஜீப்பின் மீது செஞ்சிலுவைச் சின்ன அடையாளங்களும் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1948 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 38 வருடங்களாக வண பிதா ஓம்லோ அடிகளார் இலங்கையின் பல பகுதிகளிலும் சேவை புரிந்து வருகிறார்.

இவர் கடந்த மூன்று ஆண்டு காலமாக பரந்தன் சென் அன்ரனிஸ் ஆலயத்தில் கத்தோலிக்க துறவியாக சேவை புரிந்து வருகிறார்.

ஓம்லோ அடிகள் ஏற்கனவே பல இராணுவ கெடுபிடிகளுக்குள்ளாகியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

போராளி---

(1 ம் பக்கத் தொடர்ச்சி) வணக்கத்தையும் அஞ்சலியையும் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

இவர்கள் பிரயாணம் செய்த படகும் இயந்திரங்களும் குருநகர் மீனவர்களினால் மீட்கப்பட்டு குருநகர் கரையை நோக்கி கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பி வந்தவர்களில் மலர் தனியார் மருத்துவசாலைகளில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது. (உ-10)

கந்தசாமியின்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி) சாமியின் கூற்று.

ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தருபவர்கள் கொல்லப்பட்டால், பழியானது ஈழப் போராளிகளின் எதிரிகள் மீது விழுவதுதானே இயற்கை? எப்படி ஈழப் போராளிகள் மீது விழ முடியும்?

இதை கந்தசாமி விளக்கியதாகத் தெரியவில்லை.

மொத்தத்தில் அவர் வெளியிடும் ரகசியங்கள்' படிக்க விறுவிறுப்பாக உள்ளன.

—இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

வவுனியாவில் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 9 கடந்த திங்கட்கிழமை காலை வவுனியா பரநாட்டகல் என்ற இடத்தில் போராளிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் கடும் மோதல் நிகழ்ந்தது.

வவுனியா முகாமிலிருந்து ட்ரக், ஜீப்புகள் சகிதம் நடைபவனியாக வந்த சிப்பாய்கள் மீதே போராளிகள் தாக்குதல் நடத்தினர்.

சில மணிநேர மோதலின் பின்னர் சிப்பாய்கள் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

இருதரப்பிலும் ஏற்பட்ட சேதம் பற்றிய விபரம் ஏதும் தெரியவரவில்லை. (உ-6)

விடுதலையான 134 பேர் திருமலை திரும்பினர்

திருகோணமலை, ஜூலை 9 பூஸாத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்ட 134 தமிழர்கள் திங்கள் இரவு 7 மணியளவில் கப்பல் மூலம் திருகோணமலை வந்து சேர்ந்தனர்.

திருகோணமலை பிரசைகள் குழுவின் பிரதிநிதியான முன்னாள் உதவி அரசாங்க அதிபர் திரு சி. எம். கணேசலிங்கம் விடுதலை செய்யப்பட்டவர்களுடன் கப்பலில் வந்தார்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் திரு கணேசலிங்கத்தின் புதல்வன் ரமேஷும் இருந்தார்.

பெரும்பாலான மாணவர்களும் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

கப்பலில் வந்த அனைவரும் பாதுகாப்பு அதிகாரிகளினால் கொண்டுவரப்பட்டு திருமலைபுனித மரியாள் பேராலய வளவில் காத்து நின்ற பெற்றோர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலை இணைப்பு அதிகாரி கேர்ணல் விஜயரத்தின அச்சமயம் சமுகமளித்திருந்தார்.

தேடுதலின்போது அப்பாவி மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களுக்கு அவர் வருத்தம் தெரிவித்தார். (உ-எ-150

படுவான்கரையில் இரவிரவாக தேடுதல்

மட்டக்களப்பு, ஜூலை 9 மட்டக்களப்பு, படுவான் கரைப்பகுதியில் ரோந்து சென்ற ஆயுதப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள காடுகள், கிராமங்களில் கடந்த திங்கள் மாலை முதல் செவ்வாய் காலைவரை சல்லடைத் தேடுதல் நடத்தப்பட்டது.

கல்லடி முகாமில் இருந்து 150 படையினர் வரை விரைந்து வந்து தேடுதலை முதலில் ஆரம்பித்தனர். ஹெலிக் கொப்டர்களில் இருந்து ரொக்கெட் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதலின் போது 100 பேர் வரை கைது செய்யப்பட்டு கல்லடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அதன் பின்னர் இரான் புல்லுமலை, ஏறுவூர், வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி ஆகிய முகாம்களில் இருந்து சுமார் 500 படையினர் வரையில் அந்த இடத்துக்குச் சென்று தேடுதலைத் தொடர்ந்து நடத்தினர்.

படையினரின் தேடுதல் தாக்குதலில் உயிரிழந்தோர் எவ்வளவு என்பது பற்றி அறியமுடியாமல் உள்ளது.

8 தீவிரவாதிகள் வரையில் இறந்துள்ளனர் என்று பாதுகாப்புப்படையினர் கூறினர். (உ-எ-21)

அரசியல் தீர்வு

(1 ம் பக்கத் தொடர்ச்சி) களில் உயர் நீதிமன்றங்கள் அமைப்பதிலும் எந்த விதத் தகவலும் காணப்படவில்லை.

புதிய யோசனைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி திருப்தி அடைந்துவிட்டது என்று கூறமுடியாது. எனினும் சில அம்சங்கள் குறித்து உடன்பாடு இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

எது எப்படி இருப்பினும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பது என்பதில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை என்றார். (ஆ-உ-ஓ)

திட்டவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) குறித்து ஆராய்ந்துமுடிவு எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி சொன்னார்.

மாகாண சபைகள் வந்தாலும் நாட்டின் ஒற்றையாட்சி முறை பேணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு இப்பிராந்திய அமைதிக்கே வழிகாட்டும்—

மாகாண சபைகள் இனப்பிரச்சினைக்கு மட்டுமே தீர்வல்ல. அதிகாரத்தைப் பரவல் செய்யவும் நல்ல வழிமுறை—

மீண்டும் அமைச்சரவை, அரச நாடாளுமன்றக் குழு ஆகியவற்றின் அனுமதியைப் பெற்ற பின்னரே, ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றத்தில் மாகாண சபைச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் — என்றும் ஜனாதிபதி மேலும் சொன்னார். (ஆ-எ)

உலக உதை பந்தாட்டம்:

அடுத்த போட்டி 1990 இல் இத்தாலியில்

மெக்ஸிக்கோ, ஜூலை 8 உலக உதைபந்தாட்டக் கிண்ணத்துக்கான அடுத்த போட்டி 1990 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெறும்.

24 நாடுகள் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜோ ஹவலங்கே இதனைத் தெரிவித்தார்.

இதனிடையில் 1990 இல் நடைபெறவுள்ள உலககிண்ணப் போட்டிகளை மத்தியஸ்தம் செய்பவர்கள் தெரிவு செய்யப்படுவதில் மாற்றம் செய்யப்படும் என்று உதை பந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளனத்தலைவர் ஜோசப் பாட்டர் சொன்னார். (எ-)

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 9 யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் பல்வேறு விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

7 பேர் கொண்ட உதைபந்தாட்டம் 7 பேர் பங்கு கொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட், கரம்- ஒற்றையர், இரட்டையர் ஆட்டங்கள், டாம் ஆகிய போட்டிகளைத் திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் 'உதைபந்தாட்ட லீக்' இல் அங்கத்துவம் வகிக்காத கழகங்கள், சனசமூக நிலைய அணிகள் யாவும் பங்குபற்றலாம்.

மற்றைய போட்டிகளில் பங்குபற்ற தனிப்பட்ட கட்டுப்பாடுகள் கிடையாது

விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் செயலாளர், திருவள்ளுவர் சனசமூக நிலையம், 432/2 மடம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள் (உ - 7)

தமிழ் அதிகாரி பிணமாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை. 9 மாங்கேணி முகாம் தாக்கப்பட்ட சமயம் தகர்க்கப்பட்ட பனிச்சங்கேணி பாலத்தைத் திருத்துவது சம்பந்தமாக மதிப்பீடு தயாரிக்கச் சென்ற தொழில் நுட்ப அதிகாரி, பிணமாக நேற்றுக்காலை மீட்கப்பட்டார்.

பாலம் அருகில் அவரது சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டது.

கல்லடி வாசியான திரு. செல்லத்துரை (52வயது) மேலதிகாரிகளின் உத்தரவைத் தொடர்ந்து சேதமடைந்த பாலத்தைப் பார்வையிட திங்கள் காலை சென்றார். (உ-எ-21)

பணக் கொடுக்கல் வாங்கல்கள்

யாழ் கோட்டை தபால் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 9 யாழ் பிரதம அஞ்சல் அலுவலகத்தின் தற்காலிக இடம் மாற்றத்தினால் தடைப்பட்டுள்ள பணக் கொடுக்கல் வாங்கல்களை கோட்டையில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதனிடையில் யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய அஞ்சல் அலுவலகங்களுக்குரிய 500 ரூபாவுக்கு மேற்பட்ட காசுக் கட்டளைக் கொடுக்கல், வாங்கலும் 250 ரூபாவுக்கு மேற்பட்ட சேமிப்பு வங்கிக் கொடுக்கல், வாங்கலும், பரீட்சை பற்றுச்சீட்டு வழங்கப்படுதலும் யாழ் கோட்டை அஞ்சல் அலுவலகத்தில் நடைபெறுவதற்கு யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஒழுங்குகள் செய்திருக்கிறார். (உ-எ)

தபாலகங்கள் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூலை.9 சுண்டுக்குளி, வண்ணார் பண்ணை, கொக்குவில் அஞ்சல் அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் மீண்டும் கருமங்களை ஆற்றுவதற்குத் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

இந்த அஞ்சல் அலுவலகங்களில் சகல கருமங்களும் இதுகாலவரை முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன. (உ-எ)

கடைக்குள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி) அந்த தமிழ் இளைஞர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

1. வேலாயுதம், வயது 27. ஓமந்தை அகதி முகாம் வாசி. 2 குழந்தைகளின் தந்தை.

2 கோவிந்தன் பாலசிங்கம் வயது 17. மாத்தளை வாசி

3 சாந்திக்குமார், 22 வயது, மாத்தளைவாசி, (உ-எ-6)

முக்கிய
அறிவித்தல்
வடபிராந்திய லொறி
போக்குவரத்துச் சேவை

தற்சமயம் ஏற்பட்டிருக்கும் போக்குவரத்துச் சேவை பிரச்சினைகள் சம்பந்தமாக எதிர்வரும் 10-7-66 வியாழக்கிழமை மணிக்கூட்டு வீதியிலிருக்கும் ஞானம்ஸ் ஹோட்டலில் கூடி ஆராயவிருப்பதால் சகல லொறி உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்,

வடபிராந்திய லொறி
போக்குவரத்துச் சேவை

ROCK
Engineers & Contractors
Water Supply &
Building Works

குழாய்க் கிணறுகள்
(இயந்திரங்கள் மூலம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் உள்ள
எந்த இடத்திலும் சரி

24 மணித்தியாலங்களுக்குள்
குழாய்க் கிணற்றை அமைத்துத்
தண்ணீரும் பெற்றுத் தருவோம்.

தோட்டத் தேவையாகவும் இருக்கலாம். வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம். எமது ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து குறைந்தது 5 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யலாம்.

குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு கஷ்டமாக இதுவரை இருந்த இடங்களாகிய சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், கச்சாய், குடமியன், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் நாங்கள் வெற்றிகரமாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

தொடர்பு கொள்ளுங்கள்!

ரொக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

பாதுகாப்பான சூழலில் ரெலிபோன் பேச "ரெலிகுளோப்"
ஆர்.ஜி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 25088 - 6 தொடர்புகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் [illegible] உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 09—07—1986
Printed and Published by Uthayan Publications (Pvt) Ltd. 15 Second Lane, [illegible] Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ 60 N 86